**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, SATHANKULAM**

| | | | |
|---|---|---|---|
| **P.W.2** | **பெயர் : செல்வின் ராஜா**<br>**த/பெ : கோவில்துரை** | **OS.No. 38/2023** | **20.03.2025** |

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ன் குறுக்கு விசாரணை)

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். எனக்கு சொந்தமான இடம் கிடையாது என்றால் சரிதான், எனது மனைவியின் தாய்மாமாவின் தஞ்சை நகரத்தில் உள்ள 13 ஏக்கர் இடத்தில் விவசாயம் செய்கிறேன். மேற்படி 13 ஏக்கர் நிலத்தில் என்ன விவசாயம் செய்கிறேன் என்றால் 1800 முருங்கை மரமும், அதன் ஊடே 500 தென்னை மரங்களும் உள்ளன. எனது மனைவியின் தாய்மாமா பெயர் என்ன என்றால் தேவசகாயம்.

2. மேற்படி பயிர்களுக்கு நான்தான் தண்ணீர் பாய்ச்சுவேனா என்றால் இல்லை, பராமரிப்பு மட்டுமே நான் செய்வேன், தண்ணீர் பாய்ச்சுவதற்கு தனியாக ஆள் வைத்துள்ளோம். மேற்படி பராமரிப்பு பணிக்கு எனக்கு சம்பளம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி விருட்சங்களுக்கு தேவசகாயம்தான் செலவு செய்வார் என்றால் சரிதான். எனது மனைவியின் தாய்மாமாவிற்கு எந்தெந்த புல எண்களில் இடம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், தெரியாது.

3. எனக்கு சொந்தமாக கார் உள்ளதா என்றால் என் மனைவி பெயரில் கார் உள்ளது. மேற்படி காரை நாங்கள் வாடகைக்கு விடுவோமா என்றால் இல்லை. மேற்படி கார் எங்களது சொந்த பயன்பாட்டிற்குரியது என்றால் சரிதான். நான் அரசை ஏமாற்றி சொந்த பயன்பாட்டிற்குரிய வாகனத்தை வாடகைக்கு விடுகிறேன் என்றால் சரியல்ல. நான் அடிக்கடி காவல்நிலையம் செல்லும் நபர் என்றால் சரியல்ல. எங்கள் ஊரை சேர்ந்த எட்வின் ராஜாவை நான் அடித்ததாக என் மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. எனது பக்கத்துவீட்டில் லாசர் என்பவர் உள்ளார் என்றால் சரிதான். மேற்படி லாசருக்கும் நான் இடையூறு கொடுத்ததால் அவர் காவல் நிலையத்திற்கு சென்றார்

என்றால் சரியல்ல, லாசர்தான் என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். மேற்படி லாசரின் வீட்டை நான் உற்றுப்பார்த்ததாக லாசர் என்மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல, அவரது வீட்டு காம்பவுண்ட் சுவரை ஏறி குதித்தாக புகார் கொடுத்தார்.

5. எனது இடையூறை தாங்க முடியாமல் மேற்படி லாசர் தனது காம்பவுண்ட் சுவரை 12 அடி உயரத்திற்கு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல, லாசரின் இடையூறு தாங்க முடியாமல் நான்தான் என்னுடைய சுவரை உயர்த்தி கட்டியுள்ளேன். TDTA திருச்சபைகுட்பட்ட பள்ளியில் எனது மனைவி ஆசிரியையாக பணிபுரிகிறார் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் எந்த ஊரில் வேலை செய்கின்றனர் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6. வாதி எந்தெந்த பள்ளிகளில் பணிபுரிந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அனைத்து விபரங்களும் தெரியாது, காரிவிளையில் வேலைபார்த்தது மட்டும் தெரியும். எனது ஊருக்கும் காரிவிளைக்கும் சுமார் 4–5 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். வாதி எனக்கு எப்படி பழக்கம் என்றால் எங்கள் ஊரில் வாக்காளர் பட்டியல் தயார் செய்ய வரும்போது பழக்கம். முன்பு பழக்கம் உண்டா என்றால் கிடையாது, தற்போது எங்காவது பார்த்துக் கொண்டால் பேசிக் கொள்வோம்.

7. வாதி எப்போது இவ்வழக்கை தாக்கல் செய்தார் என்ற விபரமும், வழக்கு வாய்தா விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான், தெரியாது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கில் சொல்லப்பட்டுள்ள பிளக்ஸ் போர்டில் உள்ள விபரம் குறித்து, வாதியிடம் எப்போது, எந்த இடத்தில் வைத்து கேட்டேன் என்றால் 09.02.2023ல் மேற்படி பிளக்ஸ் போர்டை பார்த்தவுடன், அன்றைய தினமே மாலை சுமார் 4.00 மணியளவில் வாதிக்கு தொலைபேசி மூலம் அழைத்து கேட்டேன்.

8. இதுகுறித்து வாதியிடம் நேரடியாக கேட்டேனா என்றால் இல்லை. அப்படியானால் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் இதுகுறித்து வாதியிடம் நேரடியாக கேட்டதாக கூறியிருந்தால் அது தவறு என்றால் ஆமாம், அப்படி குறிப்பிட்டிருந்தால் அது தவறுதான். எனது பெயரையும், எனது தகப்பனார் பெயரையும்

நான் வாதியிடம் எப்போது தெரிவித்தேன் என்றால் 4 மாதங்களுக்கு முன்பு.

9. எங்கு வைத்து தெரிவித்தேன் என்றால் சாத்தான்குளத்தில் பாரத் பெட்ரோல் பங்க் அருகில் வைத்து. என்னை இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க அழைத்தது யார் என்றால் வாதி அருள்ராஜ். எங்கு வைத்து அழைத்தார் என்றால் தொலைபேசியில் அழைத்தார். வழக்கு தொடர்பான விளம்பர பிளக்ஸ் போர்டு என்ன வண்ணத்தில் இருந்தது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி விளம்பர பிளக்ஸ் போர்டு எதில் கட்டப்பட்டிருந்தது என்றால் பல்க்கிற்கு எதிரில் தரையில் வைக்கப்பட்டிருந்தது.

10. பொதுவாக சாத்தான்குளத்தில் வைக்கப்படும் அனைத்து பிளக்ஸ் போர்டுகளையும் நான் படிப்பேனா என்றால் நேரில் தென்படும் போர்டுகளை படிப்பேன். வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் நான்கு மாதத்திற்கு முன்பு. எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை யார் கூறியது என்றால் நான் சொல்லி, தட்டச்சு செய்யப்பட்டது. எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிராது சங்கதிகளை நான்தான் சொன்னேனா என்றால் முழுவதுமாக நான் சொல்லவில்லை, எனக்கு தெரிந்த விபரத்தை நான் சொன்னேன்.

11. அப்படியானால் மீதமுள்ள விபரத்தை சொல்லியது யார் என்றால் வழக்கறிஞர் சொன்னார். அப்படியானால் பிரதிவாதி யார் என்றும், அவரது தகப்பனார் பெயரையும் கூறியது யார் என்றால் வழக்கறிஞர். வாதியின் பிராதில், 09.02.2023 ல் மேற்படி பிளக்ஸ் போர்டு குறித்து வாதியிடம் நான் தெரிவித்தது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் வாதியின் பிராதை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.

12. மேற்படி பிளக்ஸ் போர்டை வைத்தது யார் என்றும், என்ன தேதியில் வைக்கப்பட்டது என்றும் நான் விசாரித்தேனா என்றால் இல்லை. மேற்படி பிளக்ஸ் போர்டால் சாத்தான்குளம் பஜாரில் வியாபாரிகளிடம் பரபரப்பு ஏற்பட்டதாக நான் கூறியுள்ளேன், இது குறித்து நான் என்ன சொல்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் நன்மதிப்பு சமுதாயத்தில் எந்த இடத்தில் குறைந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் காரிவிளையை சேர்ந்த இருவர், வாதியை மிகவும் நல்லவர் என்றும்,

வாதி ஏழைய எளிய மாணவர்களுக்கு சீருடைகள் எடுத்துக் கொடுப்பார் என்றும், கல்லூரி மாணவர்களுக்கு கல்லூரி கட்டணம் செலுத்துவார் என்றும் கூறினர்.

13. காரிவிளையை சேர்ந்த மேற்படி இரண்டு நபர்கள் யார் என்றால் பெயர் தெரியாது. நான் பணம் பெற்றுக் கொண்டு, காவல் நிலையத்திலும், ஜாமீன்தாராகவும் சாட்சியாகவும் சொல்லக்கூடிய நபர் என்றால் சரியல்ல. நான் வாதியுடன் அனைத்து இடங்களுக்கும் பொதுவாக செல்லக்கூடிய நபர் என்றால் இல்லை. அப்படியானால் வாதி எந்தெந்த பள்ளிகளில் வேலை செய்தார் என்றும், எங்கெங்கு செல்கிறார் என்றும், யாரை சந்திக்கிறார் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான், தெரியாது.

14. வாதி அந்தஸ்து, கீர்த்தி, நன்மதிப்பு, புகழ் உள்ளவர் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் ஊரிலும், திருச்சபை விழாக்களிலும் பிரச்சனை உண்டு செய்து அதன்மூலம் பணம் பறிக்கும் நபர் என்றால் சரியல்ல, எனது மனைவி ஆசிரியையாக இருப்பதால் 1 இலட்சத்திற்கு மேல் சம்பளம் பெறுகிறார், அதனால் எனக்கு பணம் பறிக்க எவ்வித அவசியமும் இல்லை.

15. எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றாலும், பிரதிவாதிகள் எவ்வித பிளக்ஸ் போர்டும் வைக்கவில்லை என்றாலும், அதில் உள்ள சங்கதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.03.20 16:45:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.